செ.கு.எண் : 56

நாள் : 17.06.2011

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 17.06.2011

தமிழ்நாட்டில் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறந்த எதிர்காலம் அமையப் பெற, தரமான மற்றும் சமமான கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில், 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டத்திற்கு எனது அரசால் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத் திருத்தத்தினை எதிர்த்து, ஒரு சிலர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இந்த வழக்கினை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் இந்தத் திருத்தச் சட்டத்திற்கு இடைக்காலத் தடை விதித்தது. சென்னை உயர் நீதிமன்ற உத்தரவினை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் சிறப்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. தமிழக அரசின் இந்த சிறப்பு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், தனது 15.06.2011 நாளிட்ட தீர்ப்பில், பாடத்திட்டத்தின் தரம் மற்றும் பாடநூல்களின் தரம் ஆகியன குறித்து ஆராய்வதற்கு, தலைமைச் செயலாளர் தலைமையில், இரு மாநில பிரதிநிதிகள், தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (NCERT) இரு பிரதிநிதிகள், இரு கல்வியாளர்கள், பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் மற்றும் பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்றும், இந்தக் குழு தனது அறிக்கையை 6.7.2011-க்குள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தது.

உச்ச நீதிமன்ற உத்தரவிற்கிணங்க, கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது:-

| | | |
|---|---|---|
| 1. | தமிழக அரசின் தலைமைச் செயலாளர் | தலைவர் |
| 2. | இரு மாநில பிரதிநிதிகள் | |
| | அ) திரு ஜி. பாலசுப்பிரமணியன்,<br>முன்னாள் இயக்குநர் (கல்வி),<br>மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் | உறுப்பினர் |
| | ஆ) திருமதி விஜயலட்சுமி சீனிவாசன்,<br>முன்னாள் முதல்வர்,<br>லேடி ஆண்டாள் மெட்ரிகுலேஷன்<br>பள்ளி, சென்னை மற்றும்<br>ஆலோசகர்,<br>சென்னை சேவா சதன்<br>(உதவி பெறும் பள்ளி),<br>தாம்பரம் | உறுப்பினர் |
| 3. | இரு கல்வியாளர்கள் | |
| | அ) திரு சி. ஜெயதேவ்,<br>நிறுவனர் மற்றும் செயலாளர்,<br>டி.ஏ.வி. பள்ளிகள் குழுமம்,<br>கோபாலபுரம், சென்னை | உறுப்பினர் |
| | ஆ) டாக்டர் திருமதி. ஒய்.ஜி. பார்த்தசாரதி,<br>முதல்வர் மற்றும் இயக்குநர்,<br>பத்மா சேஷாத்ரி பாலபவன் பள்ளிகள்<br>குழுமம், சென்னை | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 4. | தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இரு பிரதிநிதிகள்<br><br>அ) பேராசிரியர் பி.கே. திரிபாதி, அறிவியல் மற்றும் கணிதவியல் கல்வித் துறை, புது டெல்லி<br><br>ஆ) பேராசிரியர் அனில் சேத்தி, சமூக அறிவியல் துறை, புது டெல்லி | <br><br>உறுப்பினர்<br><br><br>உறுப்பினர் |
| 5. | அரசுச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை | உறுப்பினர் |
| 6. | பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் | உறுப்பினர்-செயலர் |

மேற்கண்ட குழு, உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, 6.7.2011-க்குள் தனது அறிக்கையை சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அளிக்கும்.

3/3

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்